பக்கங்கள் 18+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 18 புதன்கிழமை 03.09.2025 | அதிர்வு 34

## சம்மாந்துறையில் ஆணின் சடலம் மீட்பு!



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செம்மணிக்கு நீதி கிடைக்கும்

## அதைத் திசை திருப்ப ஜனாதிபதி வடக்குக்கு வரவில்லை என அமைச்சர் சந்திரசேகர் பதிலடி

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தைத் திசை திருப்பி, அதனை மூடிமறைப்பதற்காகவே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்குக்கு வந்துள்ளார் என வெளியாகும் தகவல்களை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அடி

02

# கொடிகாமத்தில் ரயிலில் மோதி பெண் ஒருவர் பரிதாப மரணம்!

யாழ். தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் ரயிலில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த உஷாநத் சங்கீதா (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி இன்று புதன்கிழமை பயணித்த ரயிலுடன் கொடிகாமம் பகுதியில் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் கைத் தொலைபேசியில் உரையாடியவாறு தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட வேளை விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# யாழ். ஆடியபாதம் வீதியில் பகலில் டிப்பர் வாகனம் பயணிக்கத் தடை

## நல்லூர் பிரதேச சபை அறிவுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். புதிய செம்மணி வீதிச் சந்தியில் இருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக டிப்பர் வாகனங்கள் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பயணிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய பாரவூர்திகள் காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை மற்றும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை அந்த வீதியூடாகப் பயணிப்பதற்குத் தடை விதித்து பொதுப்போக்குவரத்தை இலகுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




முன்பள்ளி சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பணிக்குச் செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு பொதுப்போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்குடன் இந்த விடயங்கள் குறித்து நல்லூர் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டு, இந்தப் போக்குவரத்துத் தடை நடைமுறைக்கு வந்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் பலகைகள் வீதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வாகன சாரதிகள் இந்த விதிமுறைகளைப் பின்பற்றுமாறு நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் அறிவுறுத்தியுள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு இன்று இரவு வெளியாகும் சாத்தியம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று இரவு வெளியிடப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 787 மையங்களில் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றது. இதேவேளை, இம்முறை புலமைப்பரி சில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 951 ஆகும்.



## செம்மணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோடு நிராகரித்துள்ளார்.

"வடக்கிலுள்ள புதைகுழிகளை மூடி மறைப்பதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு வந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கின்றார் என சில தமிழ் அரசியல்வாதிகள் பாவித்தனமான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கு நிதி ஒதுக்கியது யார்? ஸ்கேன் இயந்திரம் கொண்டு வந்தது யார்? புதைகுழியைப் பாதுகாப்பதற்கு இரவு நேரங்களில் காவலாளிகளைப் போட்டிருப்பது யார்? இவற்றையெல்லாம் எமது அரசே செய்கின்றது.": – என்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் சுட்டிக்காட்டினார்.

"செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படும். இது தொடர்பான உறுதிமொழியைக்கூட எமது ஜனாதிபதியே வழங்கியுள்ளார்.

இனிமேலும் தமிழ் மக்களுக்கு இப்படியான தமிழ் அரசியல்வாதிகளால் தண்ணி காட்ட முடியாது. தமிழ் மக்கள் அவர்களை நிராகரித்துவிட்டனர். இதனால்தான் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குப்பைகள் எல்லாம் கூட்டுச் சேர்ந்தன. துரோகிகள் என விமர்சிக்கப்பட்டவர்களுடன் கூட கூட்டுச் சேர்ந்தனர்.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து எதிர்வரும் 23 ஆம் திகதி ஒரு வருடமாகின்றது. பொருளாதார சவால்கள் உள்ளன. அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டால்தான் அபிவிருத்திகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். பொருளாதாரத்தை ஸ்தீரப்படுத்தி வருகின்றோம்.

எமக்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்துக்கள் விதைக்கப்படலாம். ஆனால், உண்மை என்னவென்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள். எங்களுக்கான ஆதரவை மக்கள் மென்மேலும் வெளிப்படுத்துவார்கள்." – என்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் குறிப்பிட்டார்.

## சம்மாந்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிர்தௌஸ் பள்ளிவாசல் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்படும் மூன்று மாடி வீட்டின் மேல் அறை ஒன்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது..

சடலமாக மீட்கப்பட்டவர் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபராவார்.

இவர் கடந்த 15 நாள்களாகச் காணாமல் சென்றிருந்த நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பில் ரயிலில் மோதி இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, வந்தாறுமூலை பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் சென்று கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் களுவன்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தந்தையே (வயது 26) உயிரிழந்துள்ளார்.

ரயில் ஒன்று மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அந்த வேளை வாகனச் சாரதியான இந்த நபர் களுவன்கேணி பிரதேசத்தில் இருந்து செங்கலடி நகரத்துக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை ரயிலில் மோதி படுகாயமடைந்தார்.

அதையடுத்துக் காயமடைந்த நபரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான பயண உதவியாக, ரயில் சாரதி, ரயிலை பின்னோக்கிச் செலுத்தி, ஏறாவூர் ரயில் நிலையத்தில் விபத்துக்குள்ளானவரை ஒப்படைத்தார். எனினும், அங்கு அவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசிர் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று அவதானித்ததோடு, வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பாவையிட்ட பின்னர் மரண விசாரணைகளை மேற்கொண்டார். ஏறாவூர் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# கோர விபத்தில் இருவர் மரணம்!

மத்திய அதிவேக வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லொறி ஒன்றும் பவுசர் வாகனம் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# 7 வருடங்களின் பின் திறந்து வைக்கப்பட்ட வவுனியா பொருளாதார மத்திய நிலையம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் கடந்த 2018ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட விசேட பொருளா ணதார மத்திய நிலையம் 7 வருடங்களின் பின்னர் இன்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக கடந்த 2018ஆம் ஆண்டு வவுனியா மதவுவைத்தகுளத்தில் 293 மில்லியன் ரூபா செலவில் விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது.

அதனை ஓமந்தையில் அமைப்பதா அல்லது தாண்டிக்குளத்தில் அமைப்பதா என்று அரசியல்வாதிகளுக்கிடையில் ஏற்பட்ட இழுபறிகளுக்கு மத்தியில் மதவுவைத்தகுளத்தில் அது அமைக்கப்பட்டது.

எனினும், விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் பல்வேறு காரணங்களால் அது இயங்க முடியாத சூழல் ஏற்பட்டதுடன் அதன் கட்டுமானத்திலும் பழுதுகள் ஏற்பட்டன.

இந்தநிலையில், அந்த நிலையத்தில் மீண்டும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்று மக்கள் பாவனைக்காக அது கையளிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் 50 கடைகள் அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக 35 கடைகள் வவுனியா மொத்த வியாபார சந்தை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கடை சதொச நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் பிரதி அமைச்சர்களான எம்.ஜெயவர்த்தன, உபாலிசமரசிங்க, வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரால் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது.


















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் பழைய பல்லவி

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் இன்னும் ஐந்து நாள்களில் - அதாவது வரும் திங்கட்கிழமை - கூட இருக்கையில் -

கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக புதிய பிரேரணை ஒன்றைத் தீர்மானமாக நிறைவேற்றுவதற்காக பிரிட்டனைத் தலைமையாகக் கொண்டு இணைத் தலைமை நாடுகள் நகர்வுகளை முன் கொண்டு வருகையில் -

தன்னுடைய வழமையான பல்லவியை இந்த அரசாங்கமும் திரும்பவும் ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கையில் யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்து விட்டன. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து, மீள நிகழாமையை உறுதிப்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தன்னுடைய தொடர் தீர்மானங்கள் மூலம் இலங்கையை வலியுறுத்தி வருகின்றது.

எல்லாத் தடவைகளிலும் இது தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானங்களை - முடிவுகளை - வலியுறுத்தல்களை - பெரும்பாலும் அடியோடு நிராகரித்து வரும் கொழும்பு ஆட்சிப் பீடம் இவ்விவகாரத்தில் உறுப்பு நாடுகளின் கரிசனைகளை கவனத்தில் எடுத்து, அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஒவ்வொரு தடவையும் தனக்குக் கால அவகாசமும் நேரமும் இடமும் தேவைப்படுவதாக கூறுவது வழமை.

இப்படி அவகாசம் வேண்டும், வேண்டும் என்று சமாதானம் கூறிக் கூறியே 16 ஆண்டுகளைக் கடத்தி விட்ட இலங்கை அரசாங்கம், மீண்டும் அதே பல்லவியை பாடத் தொடங்கி இருக்கின்றது. இப்போது தங்கள் தரப்பு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் தான் ஆகின்றமையால் அதனாலும் தங்களுக்குக் கால அவகாசம் வேண்டும் என்ற புதுக் கதையையும் சேர்த்து இந்த அரசு பாடத் தயாராகிவிட்டது என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

இவ்வாறு இலங்கையில் மாறி மாறி ஆட்சி பீடத்திற்கு வரும் ஒவ்வொரு புதிய அரசும், கால அவகாசம் கேட்டு விடயத்தை இழுத்தடிப்பதோடு விவகாரம் முடங்கிப் போவது தான் 16 வருட சரித்திரமாக நீடிக்கிறது. மீண்டும் அத்தகைய நீடிப்பு நாடகத்தை நடத்தி, விடயத்தை இழுத்தடித்து, கடப்பாட்டை நிறைவு செய்யாமல், சுத்துமாத்துப் பண்ணுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசும் தயாராகி விட்டது என்பது அதன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் கருத்துக்களில் இருந்து அம்பலமாகி வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸியின் கூட்டம் இறுதிக்கட்டத்தை நெருங்கும் சமயத்தில் - செப்டம்பர் 24ஆம் திகதி - ஐ.நா. பொதுச்சபையில் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் உரையாற்றுவார். அதன் பின்னர் அவர் டோக்கியோ செல்ல இருக்கிறார்.

ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும். நியூயோக்கில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் ஐ.நாவின் இரு முக்கிய அமர்வுகளில் இந்த மாதத்தில் உரையாற்றப் போகின்ற விடயம் ஒரே அம்சமாகதான் இருக்கும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள், கொடூரங்கள், மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க இலங்கையின் புதிய ஆட்சிப் பீடத்திற்கு மேலும் கால அவகாசம் தேவை என்ற கதைதான் வேறு வடிவங்களில் இரண்டு அமர்வுகளிலும் இலங்கைத் தரப்புகளால் கட்டமைக்கப்படும்.

ஒவ்வொரு தடவையும் காலத்தைக் கோரி இழுத்தடிக்கும் இந்த வழமையான சுத்துமாத்தை எதிர்கொள்வதை தவிர தமிழர்களுக்கு நீதி ஏதும் கிட்டப் போவதில்லை.





# 159 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் இரத்ததானம்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 159 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு ஹட்டன் தலைமையக பொலிஸ் நிலையத்தில் இரத்ததான முகாம் ஒன்று இன்று (03) புதன்கிழமை நிலையத்தின் பொறுப்பதிகாரி சுகததாச தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஹட்டன் பொலிஸ் வலயத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஷங்க கொடமுல்ல ஹட்டன் டிக்கோயா நகர சபையின் தலைவர் அசோக்க கருணாரத்ன, டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் தாதியர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பொலிஸ் சேவையில் இணைந்து உயிரிழந்த உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள் ஒரு நிமிடம் நினைவு கூறப்பட்டனர்.

இதேவேளை ஹட்டன் லயன்கழகம் மற்றும்.எடி.ஏ.என்டர்பிரைசஸ் நிறுவனத்தினர் அனுசரனை வழங்கியிருந்தனர்.

இந்த இரத்ததான நிகழ்வில் பொது மக்கள் மற்றும் சாரதிகள் வர்த்தகர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இணைந்து கொண்டு இரத்த தானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# கரடியனாற்றில் 32 ஆவது சிவலிங்கம் பிரதிஷ்டை!

(வி.ரி.சகாதேவராஜா)

பாண்டிருப்பு வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு மையத்தால் வழங்கப்பட்ட சிவலிங்கம் கரடியனாற்றில் பிரதிஸ்டை செய்யப்பட்டது.

கரடியனாறு நரசிம்ம வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகத்தின்போது இந்தச் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பாண்டிருப்பு வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு மையத்தால் வழங்கப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்ட 32 ஆவது சிவலிங்கம் இதுவாகும்.

விரைவில் கதிரவெளி நாகலிங்கேஸ்வரர் ஆலயத்திலும் மற்றுமொரு சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்படவுள்ளது.

இது தொடர்வான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு மையத்தின் பிரதானி வல்லவர் தவத்திரு புண்ணியமலர் அம்மா, ஆன்மீக இணைப்பாளர் சிவதிரு சௌவியதாசன், சுவாமி கலியுகவரதன், சிவதிரு கணவரதராஜன் ஆகியோர் அந்தப் பிரதேசங்களுக்குக் கள விஜயம் மேற்கொண்டிருந்தனர்.









# தெல்லிப்பழை பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா நேற்று!

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று (02) புதன்கிழமை பன்னாலை வரத்தளம் கற்பக விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவ கெங்கா சுதீஸ்னர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகனும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிரூபராஷும், கௌரவ விருந்தினராக யாழ்பாண பல்கலைக்கழக கல்வியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் இசை நாடக கலைஞருமான கலாநிதி வைத்தியலிங்கம் விஜயசங்கரும் கலந்து கொண்டனர்.

கலாபூஷணம் அமரர் சு.வரதராஜ சர்மா அரங்கில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான பண்பாட்டு விழாவானது பல்வேறுபட்ட கலை இலக்கிய விழுமியங்களை உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆலய முன்றலில் இருந்து பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் விழிசிட்டி சோலைக்குயில் அவைச்சகாற்றுக் களத்தினரின் தமிழ் தாய் வாழ்த்தும் கலாசார மத்திய நிலையக் குழுவினரின் வரவேற்பு நடனமும் அளவெட்டி ந. உதயசங்கர் குழுவினரின் மங்கல இசையும் கிராமிய இசை கணேசா கலைமன்றம், பல்லிய இசை விருந்து, வீரபத்திர வசந்தன் கோலாட்டம் , இசை நாடகம் என்பனவும் நடைபெற்றது.

கலைஞர்களுக்கான "கலைச்சுடர் விருது" அரச அதிபரால் வழங்கப்பட்டது. பிரதேச விருது வழங்கல் மற்றும் பிரதேச கலைமன்றங்களுக்கான கலை ஆக்கத் திறன் போட்டிகளின் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.















# அரச நிறுவனங்களைத் துப்புரவு செய்ய செயிரி வாரம் பிரகடனம் செய்யப்பட்டது

அரச நிறுவனங்களைத் துப்புரவு செய்து இட விஸ்தீரனத்தை ஏற்படுத்தி இலகுவில் பணியாற்றக் கூடியவாறு செயிரி வாரம் பிரகடனம் செய்யப்பட்டது.

அரச நிறுவனங்களில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடப்பரப்பை பயனுள் ளதும் வினைத்திறனானதுமான முறை [illegible] யில் இது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அலுவலர்களுக்கு அமைதியான மற்றும் சுதந்திரமான வேலைச்சூழலை உருவாக்கும் நோக்கத்தின் அடிப் படையிலான ஒரு நடவடிக்கையாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசும் நிறுவனத்திலும் குவிந்துள்ள [illegible] தற்காக இது வாய்ப்பாக உள்ளது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து 4 ஆம் திகதி வரையிலான நாள்கள் செயிரி வாரமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் தென் மராட்சி பிரதேச செயலகத்தின் வெளிப் புறச் சூழல் உத்தியோகத்தர்களால் [illegible]





# வாரிவனம் வேங்கடாசலபதி ஆலய திருவிழா வெள்ளிக்கிழமை ஆரம்பம்

சாவகச்சேரி வாரிவனேஸ்வரம் ஸ்ரீ வேங்கடாசலபதி கோவில் பெருந் திருவிழா நாளை மறுதினம் (05) வெள் ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங் கள் இடம்பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி (12) வெள் ளிக்கிழமை சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் (13) ஆம் திகதி தேர்த்திரு விழாவும் 14 ஆம் திகதி (14) தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

பெருந் திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ உமாசுதக் குருக்கள் தலை மையில் நடைபெறும்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவிழா கால அருளுரை!






தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவிழா கால ஆன்மீக அருளுரை வரிசையில் செல்வச் சந்நிதி ஆலய 12 ஆம் நாள் திருவிழாவை முன்னிட்டு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரமத்தின் நாளாந்த நிகழ்வாக "திருமுருகாற்றுப்படை" என்ற பெரும் பொருளில் ஆன்மீக அருளுரை இடம் பெற்றது.

உளவளத் துணையாளர் நா.நவராஜ் இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தினார்.

இன்று (03) புதன்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் 11.45 மணி வரை நிகழ்வு இடம்பெற்றது.





# மீசாலை வீரசிங்கம் மத்தியின் நூற்றாண்டு ஆரம்ப நிகழ்வு!

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.

கல்லூரி அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன், ஓய்வுநிலை அதிபர்கள் கு.சிவானந்தம், திருமதி லலிதாமலர் முகுந்தன், சி.கந்தசாமி உட்பட விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் நூற்றாண்டு கொடி, நினைவுச் சின்னம், ரீசேர்ட் என்பன அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.









# வீரச்சோலை மாணவர்களுக்கு அநேக புலமைப் பரிசில்கள்!

## ஆஸ்திரேலிய “ஒஸ்கார்” பிரதிநிதி கணேசநாதன் தெரிவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் மிகவும் பின்தங்கிய வீரச்சோலை தமிழ் மகாவித்தியாலய மாணவர்களுக்கு அநேக புலமைப் பரிசில்களை “ஒஸ்கார்” அமைப்பினூடாக வழங்கவிருக்கிறேன். ஆகவே கவனமாக படியுங்கள், பரிசுகளை பெறுங்கள் என்று ஆவுஸ்திரேலிய “ஒஸ்கார்” பிரதிநிதி தம்பியப்பா கணேசநாதன் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம், சம்மாந்துறை வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய வீரச்சோலை தமிழ் மகாவித்தியாலய மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ஒஸ்கார்” அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வழிநடத்தலில், உப தலைவர், பிரபல கட்டக்கலைஞர் அ.மகேந்திரன் ஒழுங்கமைப்பில், ஆஸ்திரேலியாவிலிருந்து விசேடமாக கலந்து கொண்ட “ஒஸ்கார்” அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர் தம்பியப்பா கணேசநாதன் இந்தத் திட்டத்துக்குப் பூரண நிதியுதவி நல்கினார்.

நிகழ்வில் பிரதம அதிதியாக, ஒஸ்கார் அமைப்பின் இலங்கைக்கான செயற்பாட்டுக்குழுத் தலைவரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா கலந்து கொண்டார்.

சிறப்பதிதியாக ஒஸ்கார் பிரதிநிதியும் காரைதீவு அனைத்து ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியத் தலைவருமான இரா. குணசிங்கம் கலந்து கொண்டார்.







# புனித சவேரியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வுகள்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் எஸ். சந்தியாகு தலைமையில் பாடசாலை திறந்தவெளி அரங்கில் மிகவும் பிரமாண்டமாக இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன், கௌரவ விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் கே.செல்வன், புனித. செபஸ்ரியார் தேவாலய பங்குத்தந்தை அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் , மன்னார் டிலாசால் ஆங்கில மொழிப் பாடசாலை இயக்குனர் அருட் சகோதரர் யோகநாதன் சோசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதே நேரம் விசேட விருந்தினர்களாக வவுனியா மற்றும் களனி பல்கலைக்கழக சிரேஷ்ர விரிவுரையாளர்களான தர்மதாசன் அன்ரன் புஸ்பராஜா மற்றும் நேச ரெட்ணம் எட்வின் லினோஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அயல் பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வி அதிகாரிகள் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

2024 ஆம் ஆண்டு தேசிய ரீதியாக இடம்பெற்ற பல்வேறு போட்டி நிகழ்வுகள், விளையாட்டுக்கள் மற்றும் க.பொ.த. சாதாரண தரம், உயர் தரம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அதேவேளை கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் பல்கலைக்கழகம் ஆகிய வற்றுக்குத் தெரிவானவர்கள் உட்பட பாட ரீதியாக அதிக புள்ளிகளை பெற்ற மாணவர்களும் நிகழ்வில் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கடந்த வருடம் விசேட தேவையுடைய மாணர்களுக்காக இடம் பெற்ற நிகழ்வுகளில் சிறப்பாகச் செயல்பட்ட 5 விசேட தேவையுடைய மாணவர்களும் பாடசாலை சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த வருடம் சாதாரண தர பரீட்சையில் 6 மாணவர்கள் 9 ஏ சித்திகளையும் உயர்தரப் பரீட்சையில் 4 மாணவர்கள் 3 ஏ சித்திகளையும் பெற்றுக் கொண்டதுடன் 26 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தி அடைந்திருந்தனர்.

அதேநேரம் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் கியூ. ஆர். கோசல்யன் சர்வதேச ரீதியாக இடம்பெற்ற ஒலிம்பியாட் கணித விஞ்ஞான போட்டியில் கலந்து கொண்டு சர்வதேச ரீதியில் வெண்கலப் பதக்கம் பெற்று கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சாதனை படைத்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.











# சுகாதார வைத்திய அதிகாரி இஸ்ஸடீனுக்கு பிரியாவிடை!

(அபு அலா )

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வந்த சிரேஷ்ட வைத்தியர் ஏ.எம். எம்.இஸ்ஸடீன் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய ராகவும், பதில் வைத்திய அத்தியட்ச கராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று (02) அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் குழாமால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பிரியாவிடை நிகழ்வின்போது, சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய வந்த காலங்களில் அவரால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறுபட்ட விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் பற்றியும், அவரின் சமூக சேவைகள் பற்றியும் ஞாபகப்படுத்தப்பட்டு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த காலங்களில் “வளமான சமூகத்தை உருவாக்கல்” எனும் தொனிப்பொருளில் அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி, ஆலிம்நகர், ஆலங்குளம், சம்புநகர், தீகவாபி போன்ற பிரதேசங்களுக்குச் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து உணவு வழங்கள் முறைமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தாய், சேய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியதுடன் சிறுவர்களுக்கும், பெரியோர்களுக்குமான பல பயனுள்ள விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் முன்னெடுத்திருந்தார்.

எந்தக் காலங்களில் எவ்வாறான ஊட்டச்சத்து உணவு வகைகளை குழந்தைகளுக்கு வழங்கவேண்டும் என்ற விஷேட கருத்தரங்குகளை பெண்கள் அமைப்பினூடாக தாய்மார்களுக்கு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.









# ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கு புதிய பிரதேச செயலாளர் கடமையேற்பு!

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட திருமதி வனஜா செல்வரெட்ணம் இன்று (03) காலை 09 மணிக்கு அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் கடமையேற்றார்.

இதன் போது மேலதிக அரச அதிபர் கே. சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி) பா.ஜெயகரன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

இன்றைய தினமே ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் தமது கடமைகளைப் பாரம் எடுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொத்துவில் பிரதேசத்தில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் மீட்பு!

(றாசிக் நபாயிஸ்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் அதன் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் பொத்துவில் பிரதேசத்திலுள்ள வெதுப்பகங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கக்கூடிய உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் உணவுப் பண்டங்கள் தயாரிப்பதற்கு பொருத்தமற்ற இடங்களில் உணவுகளை தயாரித்தமை, உணவுப் பொருள்களைப் பாதுகாப்பான முறையில் வைக்காமை போன்ற பல விடயங்கள் அவதானிக்கப்பட்டுச் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது உணவுப் பாதுகாப்புச் சட்டங்களை மீறிய இரு வெதுப்பகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக பொத்துவில் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அபராதமாக ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபா அறவிடப்பட்டது. இந்த உணவகங்களை ஒரு வார காலத்துக்கு முற்றாக மூடி அனைத்து குறைபாடுகளையும் சீர் செய்வதற்கான கால அவகாசமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் உவைஸ் பாறுக் தலைமையிலான மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மலிக் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதர்கள் கடந்த சில தினங்களாக இந்தப் பிரதேசத்தில் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

# மூதூர் அரபா நகர் பாலம் புனரமைப்பு பணி கிழக்கு ஆளுநர் தலைமையில்!

கிழக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டின் கீழ் 43 மில்லியன் ரூபா செலவில் மூதூர் அரபா நகர் பாலம் புதுப்பிப்பு பணிகளை ஆரம்பிக்க அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்ன சேகர தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வெளி விவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அருண் ஹேமசந்திரா, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மிமண, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

2024 நவம்பர் மாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையில், அந்தக் காலகட்டத்தில் ஆளுநர், பிரதி அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்படையில் இந்தப் பாலம் புதுப்பிக்க தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# வன்முறைக்குப் பிறகு முதல்முறையாக மணிப்பூர் செல்கின்றார் பிரதமர் மோடி

மணிப்பூரில் ஏற்பட்ட கடும் வன்முறைக்குப் பிறகு முதல்முறையாக பிரதமர் நரேந்திர மோடி அந்த மாநிலத்துக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி செல்ல வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பிரதமர் மோடி எதிர்வரும் 13 ஆம் திகதி மிசோரம் மற்றும் மணிப்பூர் மாநிலங்களுக்கு செல்ல வாய்ப்புள்ளதாக மிசோரம் தலைநகர் ஐஸ்வாலில் உள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, புதிதாக அமைக்கப்பட்டுள்ள பைரபி-சாய்ராங் ரயில் பாதையை திறந்து வைப்பதற்காக பிரதமர் மோடி முதலில் மிசோரம் செல்ல உள்ளார் என்று கூறப்படுகிறது.

2023 மே மாதத்தில் மணிப்பூரில் இரு இனக் குழுக்களுக்கு இடையே வன்முறை வெடித்ததில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். மேலும், 1,000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். வன்முறை காரணமாக 60,000 பேர் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர் என கூறப்படுகிறது.

வன்முறை வெடித்த பிறகு மக்களுக்கு ஆறுதல் தெரிவிக்க இத்தனை ஆண்டுகளில் பிரதமர் மோடி ஒருமுறைகூட மணிப்பூருக்கு செல்லாததை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்து வந்தன.

இந்த நிலையில் முதல் முறையாக மணிப்பூருக்கு பிரதமர் வரவுள்ளதாக மிசோரம் அரசின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், பிரதமரின் வருகை தொடர்பான இறுதி பயணத் திட்டம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலில் உள்ள அதிகாரிகளாலும் பிரதமரின் வருகையை உறுதிப்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே, பிரதமரின் வருகைக்கான தயார்நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக, மிசோரம் மாநில தலைமைச் செயலாளர் கில்லி ராம் மீனா, சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் நேற்று முன்தினம் ஆய்வு நடத்தியுள்ளார்.

இதில், பாதுகாப்பு நடவடிக்கைகள், போக்குவரத்து மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டதாக ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஜேர்மனியில் முதலீட்டாளர்கள் மாநாடு




ஜெர்மனியில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 3,819 கோடி இந்திய ரூபா மதிப்பிலான 23 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

முதல்வர் ஸ்டாலின் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக சென்றுள்ளார். ஜேர்மனியில் நேற்று முன்தினம் ஸ்டாலின் தலைமையில் 'டி என் ரைசிங் யுரோப்' முதலீட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாக, 'டி .என். ரைசிங் ஜேர்மனி' முதலீட்டாளர் மாநாடு நடைபெற்றது.

இதில், முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் 3,819 கோடி இந்திய ரூபா மதிப்பிலான 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன் மூலம் தமிழகத்தில் 9,070 புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்.

ஜேர்மனியில் மொத்தம் 26 ஒப்பந்தங்களின் மூலம் 7,020 கோடி இந்திய ரூபா அளவுக்கு முதலீடு கிடைத்துள்ளது. இதனால் 15,320 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகி உள்ளது. தமிழகத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் பல முன்னணி நிறுவனங்கள் விரிவாக்கப் பணிகளுக்கான முதலீட்டுக்கு முன்வந்துள்ளன.

இந்த மாநாட்டில் வென்சிஸ் எனர்ஜி (1,068 கோடி இந்திய ரூபா), பி.ஏ.எஸ்.ஃப் (300 கோடி இந்திய ரூபா), பெல்லா பிரீமியர் ஹேப்பி ஹைஜீன் (300 கோடி இந்திய ரூபா ), ஹெர் ரென்க்னெக்ட் இந்தியா (250 கோடி இந்திய ரூபா), பல்ஸ் (.200 கோடி இந்திய ரூபா), விட்சென்மேன் இந்தியா (.200 கோடி இந்திய ரூபா ) மற்றும் மாஷ் எனர்ஜி (200 கோடி இந்திய ரூபா ) ஆகிய முக்கிய நிறுவனங்கள் முதலீட்டுக்கு ஒப்பந்தம் செய்துள்ளன.

பி.எம்.டபிள்யு நிறுவனத்தின் மூத்த தலைவர்களுடனான சந்திப்பின்போது, ஓட்டோ மொடிவ் மற்றும் மின்சார வாகன உற்பத்தியில் தமிழகத்தின் பங்கை எடுத்துரைத்து, பி.எம்.டபிள்யூ நிறுவனம் அதன் செயல்பாட்டை தமிழகத்தில் அதிகப்படுத்த வேண்டுமென முதல்வர் ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

ஜெர்மனியின் இரட்டை தொழில் பயிற்சி மாதிரியை தமிழகம் கொண்டு வருவதற்காக நெக்ஸ்ட் மிட்டல்ஸ்டாண்ட் (ஆஸ் பில்டங்) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 120 மாணவர்களுடன் தொடங்கும் இத்திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் 20,000 மாணவர்களாக உயரும்.

தொடர்ந்து, இங்கிலாந்து நாட்டுக்கு சென்ற முதல்வர் ஸ்டாலின், பல முதலீட்டாளர்கள் மற்றும் இங்கிலாந்து வாழ் தமிழர்களை சந்தித்தார்.

இந்நிகழ்வுகளில், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் துறைச் செயலர் வி.அருண்ராய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதிய வளர்ச்சிப் பாதை: ஜேர்மனியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"இந்தியாவிலேயே அதிகமான இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியையும், உற்பத்தித் துறை வளர்ச்சியையும் அடைந்திருக்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான். 48 சதவீதம் நகர்மயமான, அதிக தொழிற்சாலைகளும், பணியாளர்களும் இருக்கக்கூடிய மாநிலமும் தமிழகம்தான்.

ஜேர்மனியைப்போல தமிழகத்துக்கும் பெரிய வரலாறு, பாரம்பரியம் உள்ளது. தமிழும், ஜேர்மனும் உலகின் பழமையான மொழிகளில் முக்கியமானவை. இப்படிப்பட்ட மாநிலத்தில் தொழில் தொடங்க உங்களை எல்லாம் அழைக்கிறேன்.

ஜேர்மனி எப்படி ஐரோப்பிய யூனியனின் முக்கிய தொழில்துறை நாடோ, அதேபோல இந்தியாவில் தொழில் துறையின் இதயத் துடிப்பாக தமிழகம் திகழ்கிறது.

முன்னணி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், 54 லட்சம் குறு, சிறு நிறுவனங்கள், 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் இருக்கும் தமிழகத்துக்கும், ஜேர்மனிக்கும் இடையே உள்ள பொருளாதார உறவு மூலமாக, தற்போதுள்ள நட்பை இன்னும் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

ஜேர்மனி நிறுவனங்கள் உட்பட 130 இற்கும் மேற்பட்ட 'ஃபார்ச்சூன் 500' நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் திட்டங்களை நிறுவியதே, தமிழகத்தில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் நிலவுவதற்கு சான்றாகும்.


உலகளவில் நீங்கள் சிறந்து விளங்கும் ரோபோடிக்ஸ், மூலதனப் பொருள்கள் மற்றும் புத்தாக்கம் போன்ற துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். திறன் மேம்பாட்டில் ஜேர்மனியைப்போல, தமிழகமும் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. உங்களது பயிற்சி நுணுக்கங்களும், நுட்பங்களும் எங்களுக்கு பெரிதும் ஊக்கமளிக்கின்றன.

தொழில் மற்றும் தொழில்நுட்பத்தில், ஜேர்மனியின் துல்லியத்தையும், தமிழகத்தின் ஆற்றலையும் இணைத்தால், உலக அளவில் புதிய வளர்ச்சிப் பாதையையும், ஐரோப்பா மற்றும் ஆசியா இடையே வலுவான வர்த்தகப் பாலத்தையும் நம்மால் உருவாக்க முடியும்.

தமிழகத்தில் தொழில் தொடங்க வரும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய தமிழக அரசு காத்திருக்கிறது. எனவே, உங்களுடைய முதலீடுகளை தமிழகத்தில் மேற்கொள்ள வேண்டும்." என்று தெரிவித்தார்.

# கோலாகலமாக இடம்பெற்றது சீனாவின் வெற்றி விழா நிகழ்வு





இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் முறையாகச் சரணடைந்ததன் 80 ஆவது ஆண்டு நிறைவையும், மோதலின் முடிவையும் குறிக்கும் அணிவகுப்பு சீனாவின் பீஜிங்கில் இடம்பெற்றது.

இந்த 80 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் பீஜிங்கின் தியென்மன் சதுக்கத்தில் கோலாகலமாக இன்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வை, ரஷ்ய மற்றும் வடகொரிய தலைவர்கள் நேரடியாக பார்வையிட்டனர்.








# அமெரிக்காவிற்கு எதிராக சீன அரசு சதி செய்கின்றது

## புடினையும் கிம் ஜாங் உன்னையும் விமர்சித்த ட்ரம்ப்

அமெரிக்காவுக்கு எதிராகச் சதி செய்யும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் ஆகியோருக்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், சீனாவில் விருந்தளிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

தற்போது சீனாவில் நடைபெற்ற வெற்றிக் கொண்டாட்டத்துக்கான இராணுவ அணிவகுப்பில் புடினும் கிம்மும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர் தனது சமூக ஊடகங்களில் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


“மிகவும் நட்பற்ற வெளிநாட்டு படையெடுப்பாளரிடமிருந்து விடுதலை பெற அமெரிக்கா, சீனாவுக்கு அளித்த மகத்தான ஆதரவையும் இரத்தத்தையும் சீன ஜனாதிபதி ஜி குறிப்பிடுவாரா இல்லையா என்பதுதான் பதிலளிக்கப்பட வேண்டிய பெரிய கேள்வி. சீனாவின் வெற்றியின் பெருமைக்காகப் பல அமெரிக்கர்கள் இறந்தனர்.

அவர்களின் துணிச்சலுக்கும் தியாகத்துக்கும் உரிய மரியாதையும் நினைவேந்தலும் கிடைக்கும் என்று நம்புகிறேன்! அமெரிக்காவிற்கு எதிரான உங்கள் சதிக்காக விளாடிமிர் புடின் மற்றும் கிம் ஜாங் உன் ஆகியோருக்கு எனது அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்..” என்று குறிப்பிட்டுள்ளார்.



கனடா முரசு
பக்கங்கள் - 03
புதன்கிழமை 03/09/2025

## வீழ்ச்சி அடைந்த வீட்டு விற்பனை



C2▶



# கனடாவின் சில மாகாணங்களில் வெப்ப அலை எச்சரிக்கைகள்

கனடாவின் நியூஃபவுண்ட்லாண்ட் மற்றும் லாப்ரடாரின் தலைநகரான செயிண்ட் ஜான்ஸ் அருகே அமைந்துள்ள கான்செப்ஷன் பே சவுத் நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 27,000 மக்கள்தொகையுள்ள நகரம் விரைவில் குடிநீரின்றி திணறக் கூடும் என நகர மேயர் டாரின் பென்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

C2▶

# கனடாவில் இடம்பெறும் மோசடி குறித்து எச்சரிக்கை

கனடாவில் பிரபல நிறுவனங்கள் உணவு பொருள்களை விற்பனை செய்யும் போது மோசடிகளில் ஈடுபடுகின்றன என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களை கனடிய உற்பத்திகளாக குறித்த நிறுவனங்கள் வெளிப்படுத்த முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடிய உணவு ஆய்வு முகவர் நிறுவனம் இது தொடர்பில் பிரபல நிறுவனங்களுக்கு எதிராக குற்றச் சாட்டுகளை சுமத்தியுள்ளது.




கனடாவின் மேபில் இலை சின்னத்தை சில நிறுவனங்கள் தவறான முறையில் பயன்படுத்தி தங்களது விற்பனையை மேற்கொள்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு கனடிய உற்பத்திகள் என இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் எந்த ஒரு நிறுவனத்திற்கும் இதுவரையில் அபராதம் விதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா கனடா மீது கூடுதல் அளவில் வரிகளை விதித்துள்ள நிலையில் சுதேச உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற எண்ணக் கரு அதிக அளவில் பேசப்பட்டு வருகின்றது.

C2▶

# வீழ்ச்சி அடைந்த வீட்டு விற்பனை



கல்கரியில் வீட்டு விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்கரியில் நகரில் ஒகஸ்ட் மாதத்தில் வீட்டு விற்பனை கடந்த ஆண்டை விட 8.8 சதவீதம் குறைந்துள்ளது என கல்கரி வீட்டு மனை சபை தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 2024-இல் 2,182 வீடுகள் விற்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அதே மாதத்தில் 1,989 வீடுகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளன.

வீடு விற்பனை தொடர்பிலான புதிய அறிவிப்புகள் 3,478 ஆக இருந்தன, இது கடந்த ஆண்டை விட 1.7 சதவீதம் குறைவாகும். ஆனால் விற்பனைக்கு கிடைக்கக் கூடிய வீடுகள் 48.2 சதவீதம் உயர்ந்து 6,661 இற்கு சென்றுள்ளன.

வீட்டு வழங்கல் அதிகரித்திருப்பது சந்தை இயக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, விலைகள் குறைய வழி வகுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், ஊசுநுட தலைமை பொருளாதாரநிபுணர் ஆன்-மேரிலூரி தெரிவித்ததாவது, சமீபத்திய விலைகுறைவுகள் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட அனைத்து உயர்வுகளையும் சமநிலைப்படுத்தவில்லை.

குறிப்பாக வரிசை வீடுகள் மற்றும் அபார்ட்மெண்ட்கள் அதிக வழங்கலால் மிகுந்த விலை சரிவை சந்தித்துள்ளன.

அதேசமயம், தனி மற்றும் பகுதி இணைந்த வீடுகள் சில பகுதிகளில் சிறிய அளவில் விலை உயர்வையும், அதிக வழங்கல் உள்ள பகுதிகளில் விலை சரிவையும் சந்தித்து வருகின்றன.

# விமானத்தில் தினமும் பாடசாலை செல்கின்றனர் கனேடிய சிறுவர்கள்




பலருக்கு இன்றும் விமானத்தில் பயணிப்பது என்பது கொஞ்சம் பயத்தை ஏற்படுத்தும் விடயம்தான்.

ஆனால், எனக்கு பயமே இல்லை என்கிறான், முதல் நாள் பாடசாலைக்கு செல்லும் கனேடிய சிறுவன் ஒருவன்.

கனடாவின் கியூபெக் நகரிலிருந்து கிழக்கே, 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது Isle-aux-Grues என்னும் தீவு.

ஆறு வயதுச் சிறுவனான Matéo Andermann-Tessier இடம் உனக்கு விமானத்தில் பறப்பது பயமாக இல்லையா என்றால், இல்லை எனக்கு பழகிவிட்டது என்கிறான் அவன்.

Isle-aux-Grues என்னும் தீவில் 122 பேர் மட்டுமே வசிக்கிறார்கள். அங்கிருந்த பாடசாலை 1999 ஆம் ஆண்டு மூடப்பட்டுவிட்ட நிலையில், அங்குள்ள பிள்ளைகளுக்கு விமானத்தில் சென்று படிப்பதைத்தவிர வேறு வழி இல்லை.

Matéo வின் பெற்றோர் இருவருமே படகு ஒன்றின் கேப்டன்களாக இருக்கிறார்கள். ஆனால், குளிர்காலத்தில் தண்ணீர் உறைந்துவிடும், கோடை காலத்திலும் படகுப் பயணம் அபாயகரமானது என்பதால் தங்கள் பிள்ளையை விமானத்தில் அனுப்பவே அவர்களும் விரும்புகிறார்கள்.

Matéo வுடன் மேலும் ஐந்து மாணவர்களும் தினமும் விமானத்தில்தான் பாடசாலைக்கு செல்லவேண்டிய நிலை உள்ளது.

---

**கனடாவில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நகருக்குள் தண்ணீர் விநியோகம் செய்யும் முக்கிய குழாய் உடைந்ததால் கையிருப்பு நீர் வேகமாக குறைந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நகராட்சி அவசரநிலை அறிவித்து, அனைத்து வணிக நிறுவனங்களையும் மூட உத்தரவிட்டுள்ளது.

மேலும் குடிமக்கள் அவசர தேவைகளுக்கு அப்பாற்பட்ட எதற்கும் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டாம் என கோரியுள்ளது.

தீ விபத்து போன்ற சூழ்நிலைகளுக்காக அண்டை நகராட்சிகள் தண்ணீர் டேங்கர் வாகனங்களை தயார் நிலையில் வைத்திருப்பதாக பெண்ட் தெரிவித்துள்ளார்.

உடைந்த குழாயை எப்போது சரி செய்ய முடியும் என்பது தெளிவாக தெரியவில்லை.

---

**கனடாவில்...**


**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இவ்வாறான ஓர் பின்னணியில் கனடிய உற்பத்திகள் என்ற பெயரில் வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்வது பெரும் சர்ச்சையை ஏற்படுத்துள்ளது.

குறிப்பாக இது வாடிக்கையாளர்களை பிழையாக வழிநடத்தும் செயல்பாடு எனவும் இதனால் வாடிக்கையாளர்கள் நம்பிக்கையை இழக்கக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கனடிய உற்பத்திகள் என்ற போர்வையில் இறக்குமதி பொருள்கள் விற்பனை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் சுமார் 160 முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேபில் இலை சின்னம் காணப்பட்டாலும் அவை கனடிய தயாரிப்பு என்பதற்கு உத்தரவாதம் கிடையாது எனவும் லேபிள்களை கவனமாக படித்து அவை கனடிய உற்பத்திகளா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும் வாடிக்கையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# குடிதண்ணீர் தட்டுப்பாடு கனடாவில் ஏற்படும் நிலை

கனடாவின் நியூஃபவுண்ட்லாண்ட் மற்றும் லாப்ரடாரின் தலைநகரான செயிண்ட் ஜான்ஸ் அருகே அமைந்துள்ள கான்செப்ஷன் பே சவுத் நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 27,000 மக்கள்தொகையுள்ள நகரம் விரைவில் குடிநீரின்றி திணறக்கூடும் என நகர மேயர் டாரின் பெண்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நகருக்குள் தண்ணீர் விநியோகம் செய்யும் முக்கிய குழாய் உடைந்ததால் கையிருப்பு நீர் வேகமாக குறைந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நகராட்சி அவசர நிலை அறிவித்து, அனைத்து வணிக நிறுவனங்களையும் மூட உத்தரவிட்டுள்ளது.

மேலும் குடிமக்கள் அவசர தேவைகளுக்கு அப்பாற்பட்ட எதற்கும் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டாம் எனக் கோரியுள்ளது.

தீ விபத்து போன்ற சூழ்நிலைகளுக்காக அண்டை நகராட்சிகள் தண்ணீர் டேங்கர் வாகனங்களை தயார் நிலையில் வைத்திருப்பதாக பெண்ட் தெரிவித்துள்ளார்.

உடைந்த குழாயை எப்போது சரி செய்ய முடியும் என்பது தெளிவாக தெரியவில்லை.

